( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-05

# வினாத்தாள் - I


சுட்டெண்:- ..............................................

நேரம் :- 1 மணித்தியாலம்

● பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.

* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

(01)



A B C D

மீன் ஒன்றின் உருவை அமைப்பதற்கு A, B, C, D ஆகிய நான்கு கார்ட்போர்ட் அட்டைகளும் வைக்கப்பட வேண்டிய முறை உள்ள விடையைத் தெரிவு செய்க.

(1)

| | |
|---|---|
| A | D |
| C | B |

(2)

| | |
|---|---|
| C | D |
| A | B |

(3)

| | |
|---|---|
| B | A |
| C | D |

(02)





B, E ஆகிய இரண்டையும் ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்தும் இயல்பு.

(1) வீட்டினுள் வளர்க்கப்படும் பிராணிகள் என்பதனாலாகும். (2) தாவர உண்ணி பிராணிகள் என்பதனாலாகும்.
(3) நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணிகள் என்பதனாலாகும்.

(03) வேறுபட்ட உருவினைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(04)



உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின்,

(1) $\frac{2}{6}$ (2) $\frac{2}{5}$ (3) $\frac{3}{6}$

(05) கீழே தரப்பட்டுள்ள வினாவில் ▲ = 2, ● = 5, ✳ = 1, ■ = 3 என இட்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

● ■
− ■ ▲
―――

(1) ■ ▲ (2) ▲ ✳ (3) ✳ ■

(06)

| | | | |
|---|---|---|---|
| P | Q | T | R |
| M | Z | U | V |
| N | G | X | J |
| B | C | Y | L |

தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் உள்ள உருவில் கிடையாக அல்லது நிலைக்குத்தாக ஆங்கில அரிச்சுவடியின்படி, அடுத்தடுத்து இருக்கும் ஆங்கில எழுத்துக்கள் 2 வீதம் அமைந்துள்ள சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை,

(1) 5 (2) 7 (3) 6

(07)




இக்கடிகார முகத்தின் நிமிட முள் சரியாக 2 தடவைகள் சுற்றி 15 நிமிடங்களுக்கு பின்னரான நேரம்,

(1) 9.40 (2) 8.45 (3) 9.35

(08) குறித்த மாதத்தின் சரிநடுவில் வரும் திகதி 16 ஆகும். அதன்படி, அம்மாதமாக இருக்கக்கூடியது,

(1) பெப்ரவரி (2) ஒக்டோபர் (3) ஜூன்

(09)





இவ்வுரு ஒரேயளவான 30 சிறிய சதுரங்களினால் அமைக்கப்பட்டுள்ளது. கதிர் A யிலிருந்து B வரை அம்புக்குறிகளினால் காட்டப்பட்டுள்ள திசைகளின் ஊடாக பயணித்தான். கணேஷ் P யிலிருந்து Q வரை அம்புக்குறிகளினால் காட்டப்பட்டுள்ள திசைகளின் ஊடாக பயணித்தான். அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் மிகச் சரியான கூற்று,

(1) கதிரை விட கணேஷ் கூடிய தூரம் பயணித்தான்.
(2) கணேஷை விட கதிர் கூடிய தூரம் பயணித்தான்.
(3) கதிர், கணேஷ் ஆகிய இருவரும் பயணித்த தூரங்கள் சமனாகும்.

kalvi.lk

CamScanner

(10)



உரு A　　　　உரு B　　　　உரு C

A உருவில் காட்டப்பட்டுள்ள வட்ட வடிவக் கடதாசியொன்று இரு தடவைகள் மடிக்கப்பட்டு உரு C யிலுள்ள வடிவத்தைப் பெற்று அதில் உள்ள முறிந்த கோட்டின் வழியே வெட்டித் துண்டாக்கப்பட்டது. இங்கு கிடைக்கும் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 4　　　　(2) 5　　　　(3) 6


(11)



இந்நாணயக் குற்றி குவியலில் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் ஆகிய நாணயக் குற்றிகள் 2 வீதம் வைக்கப்பட்டுள்ளன. இந்நாணயக் குற்றி குவியலிலிருந்து 3 நாணயக் குற்றிகள் அகற்றப்பட்ட பின், நாணயக் குற்றி குவியலிலுள்ள நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி ரூபாய் 7.00 ஆகும். அதன்படி, நாணயக் குற்றி குவியலிலிருந்து அகற்றப்பட்ட நாணயக் குற்றிகளின் வகைகள்,

(1) ரூபாய் 5.00, ரூபாய் 2.00, ரூபாய் 1.00　　　　(2) ரூபாய் 2.00, ரூபாய் 1.00　　　　(3) ரூபாய் 5.00, ரூபாய் 2.00


(12)



மரங்கள், தென்னை மரங்கள், உயரமான தென்னை மரங்கள், பாக்கு மரங்கள் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புடைமை இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது.  இன் மூலம் வகைகுறிக்கப்படுவது,

(1) பாக்கு மரங்கள்　　　　(2) உயரமான தென்னை மரங்கள்　　　　(3) தென்னை மரங்கள்

(13)



A　　B　　C

உருவில் காட்டப்பட்டுள்ள முறைக்கேற்ப A, B, C என்னும் மூன்று ஒத்த பாத்திரங்களில் நீர் உள்ளது. A பாத்திரத்தை விட B பாத்திரத்தில் 3 லீற்றர் நீர் அதிகமாக உள்ளது. B பாத்திரத்தை விட C பாத்திரத்தில் 5 லீற்றர் நீர் அதிகமாக உள்ளது. C பாத்திரத்தில் உள்ள நீரின் அளவு 14 லீற்றர் ஆகும். அதன்படி, A பாத்திரத்தில் உள்ள நீரின் அளவு,

(1) $7l$　　　　(2) $6l$　　　　(3) $8l$

(14) வளைகோடுகள் மற்றும் நேர்கோடுகள் ஆகிய இரு வகைகளையும் கொண்ட உரு,

(1) 


(2) 

(3) 

(15) குறித்த கண்காட்சியொன்று மே மாதம் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடங்கியது. மே மாதம் 15 ஆம், 18 ஆம் திகதிகளில் கண்காட்சி நடைபெறவில்லை. கண்காட்சி 8 நாட்கள் நடைபெற்றது. அதன்படி, கண்காட்சி முடிவடைந்த நாள்,

(1) மே 22　　　　(2) மே 20　　　　(3) மே 21

(16)




இவ்வுருவில் A யினால் காட்டப்படும் முக்கோணியிலுள்ள மிகப் பெரிய எண்ணையும், B யினால் காட்டப்பட்டுள்ள முக்கோணியிலுள்ள மிகச் சிறிய எண்ணையும், C யினால் காட்டப்படும் முக்கோணியிலுள்ள மிகப் பெரிய எண்ணையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண்.,

(1) 367　　　　(2) 376　　　　(3) 269

(17) கீழே முதலில் தரப்பட்டுள்ள மூன்று உருக்களும் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. இக்கோலத்திற்கேற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



?

(1) 

(2) 

(3) 

(18) விலங்குப் பண்ணையொன்றிலுள்ள மாடுகளின் கால்களினதும், காதுகளினதும், வால்களினதும் மொத்த கூட்டுத்தொகை 84 ஆகும். அதன்படி, அவ்விலங்குப் பண்ணையிலுள்ள மாடுகளின் எண்ணிக்கை,

(1) 12　　　　(2) 14　　　　(3) 13

(19) கடையொன்றிற்குச் சென்ற பிள்ளை பேனை ஒன்றை கொள்வனவு செய்து வியாபாரியிடம் ரூபாய் 50.00 ஐ வழங்கியபோது, வியாபாரி அப்பிள்ளையிடம் மேலும் ரூபாய் 8.00 ஐப் பெற்று, ரூபாய் 20.00 ஐ மீதிப் பணமாகக் கொடுத்தார். அதன்படி, பேனை ஒன்றின் விலை,

(1) ரூபாய் 32.00　　　　(2) ரூபாய் 28.00　　　　(3) ரூபாய் 38.00

kalvi.lk
CamScanner

(20) ஒரு கடிகாரத்தில் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையேயுள்ள கோணம் ஒரு செங்கோணத்திலும் பார்க்க குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தை கீழே தரப்பட்டுள்ள நேரங்களிலிருந்து தெரிவு செய்க.

(1) மு.ப 12.20 (2) மு.ப 11.45 (3) பி.ப 3.40

(21) நாதனின் தந்தையின் தந்தைக்கும் நாதனின் சித்தப்பாவிற்கும் இடையேயுள்ள உறவு முறை,

(1) தந்தைம் மகனும் (2) பாட்டனும் பேரனும் (3) அண்ணனும் தம்பியும்

(22)

A - அழகுத் தோகை விரித்து நின்றே
B - மலையில் வந்து முகில்கள் கூட
C - ஆனந்தமாய் ஆடுது
D - வண்ண மயிலும் ஆடுது

மேலேயுள்ள கவிதையின் வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அர்த்தமுள்ள கவிதையாக அமையுமாறு ஆங்கில எழுத்துக்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தியுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) D, C, A, B (2) C, B, D, A (3) B, D, A, C



(23) பருமனின் ஒழுங்குமுறைப்படி பிரதேசங்களைக் காட்டும் விடை,

(1) நாடு - உலகம் - கிராமம் - மாகாணம் (2) கிராமம் - நகரம் - மாவட்டம் - மாகாணம்

(3) உலகம் - நாடு - கிராமம் - மாவட்டம்

(24) 

இவ்வுருவில் உடைந்த மாலையொன்றின் ஒரு பகுதி காட்டப்பட்டுள்ளது. அதில் A, B ஆகிய முனைகளைத் தொடர்புபடுத்தி சிறிய மாலையொன்றை அமைத்தால் காணக்கிடைக்கும் முறை,

(1)  (2)  (3) 

(25) குமார் தனது வீட்டிலிருந்து கிழக்குத் திசை நோக்கிச் சிறிது தூரம் சென்ற பின் தனது இடதுக் கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றான். பின்னர் தனது இடதுக் கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்ற பின் இறுதியில் தனது வலதுக் கைப்பக்கம் திரும்பினான். அதன்படி, தற்போது குமார் எத்திசையை நோக்கி நிற்கின்றான்?


(1) வடக்குத் திசை (2) மேற்குத் திசை (3) தெற்குத் திசை

(26) குறித்த வரிசையொன்றில் பாலா, அமீன், வாசு, ஆசிம், நாதன் ஆகியோர் நின்றுகொண்டிருந்தனர். முதலில் வாசுவும் கடைசியாக பாலாவும் நின்றுகொண்டிருந்தனர். வாசுவும் ஆசிமும் அருகருகேவும், பாலாவும் அமீனும் அருகருகேவும் நின்றுகொண்டிருந்தனர். அதன்படி, வரிசையில் சரிநடுவில் நிற்பவர்,



(1) ஆசிம் (2) நாதன் (3) அமீன்

(27) விமலா கண்விழித்துப் பார்த்தாள். திறந்திருந்த யன்னலினூடாக சூரிய ஒளி அறையினுள் பரவியது. அம்மா அவளை எழுப்புவதற்கு மீண்டும் குரல் கொடுத்தாள். ஆனாலும் விமலா படுக்கையை விட்டு எழும்பவில்லை. அதன்படி, விமலா ஒரு,

(1) சுறுசுறுப்பானவள் (2) நோயாளி (3) சோம்பேறி

(28) 

வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(29) அருகருகே அமைந்துள்ள இரு இலக்கங்களை கூட்டும்போது கிடைக்கும் விடை எப்பொழுதும்,

(1) 2 ஆல் வகுக்கும்போது 1 மீதியாக வரும். (2) 2 ஆல் வகுக்கும்போது மிகுதி வராது.

(3) 2 ஆல் வகுக்கும்போது 3 மீதியாக வரும்.

(30) 364, 274, 382, 295, 310 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது சரிநடுவில் வரும் எண்ணின் சரிநடுவில் உள்ள இலக்கம்,

(1) 8 (2) 6 (3) 1

kalvi.lk

CamScanner

(31) கமலாவிடம் ரூபாய் 1000.00, ரூபாய் 500.00, ரூபாய் 100.00 நாணயத் தாள்களில் மட்டும் ரூபாய் 2000.00 இருந்தது. அதன்படி, அவளிடமிருந்த ரூபாய் 100.00 நாணயத் தாள்களின் எண்ணிக்கை,


(1) 10 (2) 5 (3) 6

(32) தரப்பட்டுள்ளவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும், இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அதன்படி, இவ்விரு கூட்டங்களுக்கும் உரித்தற்ற சொல்லைத் தெரிவு செய்க.

( டிசம்பர், ஏப்ரல், மே, பெப்ரவரி, ஜூலை, செப்டெம்பர் )

(1) பெப்ரவரி (2) ஜூலை (3) செப்டெம்பர்

(33)




சதுரமுகியொன்றை அமைப்பதற்கு இன்னும் தேவைப்படும் இத்தகைய கனவுருக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

(1) 4 (2) 3 (3) 5


(34) என்னிடமுள்ள நாணயக் குற்றிகளின் எண்ணிக்கையை விட அண்ணனிடமுள்ள நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை அதிகமாகும். அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) அண்ணனிடம் என்னை விட அதிகமாகப் பணம் உள்ளது.

(2) அண்ணனிடமுள்ள பணமும் என்னிடமுள்ள பணமும் சமனாகும்.

(3) இருவரிடமும் பணம் உள்ளது.


(35)



மேலேயுள்ள உரு வரிசையில் செவ்வகங்கள் இரண்டிற்கும் நடுவில் சதுரம் அமைந்துள்ள சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை,

(1) 2 (2) 3 (3) 4

(36)




இவ்வுருவில் கம்பிச் சட்டகம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. எறும்பொன்று A யிலிருந்து B, C மற்றும் D ஊடாக சென்று மீண்டும் A வரை பயணித்தது. எறும்பு பயணித்த தூரம் 20cm எனின், கம்பிச் சட்டகத்தின் நீளம்,

(1) 8cm (2) 5cm (3) 6cm

(37) எனது அப்பாவிற்கு 4 மகன்மார்களும், 4 மகள்மார்களும் உள்ளனர். அதன்படி, பின்வரும் கூற்றுக்களில் நிச்சயமாக **பிழையாக** இருக்கக்கூடிய கூற்று,

(1) எனக்கு 3 சகோதரர்களும், 3 சகோதரிகளும் உள்ளனர்.

(2) எனக்கு 3 சகோதரர்களும், 4 சகோதரிகளும் உள்ளனர்.

(3) எனக்கு 4 சகோதரர்களும், 3 சகோதரிகளும் உள்ளனர்.

Education கல்வி අධ්‍යාපන


(38) மின்குமிழ் கோர்வையொன்றில் சிவப்பு, மஞ்சள், நீலம், சிவப்பு, மஞ்சள், நீலம், சிவப்பு, ............... எனும் ஒழுங்கில் மின்குமிழ்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. மின்குமிழ் கோர்வையிலுள்ள மின்குமிழ்களின் மொத்த எண்ணிக்கை 61 ஆகும். அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் **பிழையான** கூற்றைத் தெரிவு செய்க.

(1) மின்குமிழ் கோர்வையில் மஞ்சள் மின்குமிழ்களினதும், நீல மின்குமிழ்களினதும் எண்ணிக்கைகள் ஒன்றுக்கொன்று சமனாகும்.

(2) மின்குமிழ் கோர்வையில் மிகக் குறைவாக நீல நிற மின்குமிழ்கள் உள்ளன.

(3) மின்குமிழ் கோர்வையில் சிவப்பு நிற மின்குமிழ்கள் அதிகமாக உள்ளன.


(39)



மேசையொன்றின் மீதுள்ள சுவர்க் கடிகாரமொன்று இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது. தற்போது நேரம் பி.ப 3.30 ஆகும். தற்போது நிமிட முள் வடக்குத் திசையை நோக்கித் திரும்பியுள்ளது. பி.ப 4.15 ஆகும்போது நிமிட முள் திரும்பியுள்ள திசை,

(1) கிழக்குத் திசை (2) தெற்குத் திசை (3) மேற்குத் திசை

(40)




ஒரு வகுப்பிலுள்ள பிள்ளைகளில் கல்விச் சுற்றுலா ஒன்றில் கலந்து கொண்டவர்கள், கலந்து கொள்ளாதவர்கள் தொடர்பான விபரங்களை இவ்வட்ட வரைபு காட்டுகின்றது. கல்விச் சுற்றுலாவில் கலந்து கொள்ளாதப் பிள்ளைகளின் எண்ணிக்கை 8 ஆகும். அதன்படி, கல்விச் சுற்றுலாவில் கலந்து கொண்ட மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 16 (2) 24 (3) 32



CamScanner

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024

தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-05

# வினாத்தாள் - II

1931

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

அன்று விடுமுறை நாள். மாணவர்களாகிய நாம் கல்விச்சுற்றுலாவிற்காக பாடசாலைக்கு வந்தோம். அதிகாலை பனித்துளியும் சில்லென வீசும் குளிர்காற்றும் எமக்குப் புத்துணர்ச்சியைத் தந்தன. முதலில் விகாரமகாதேவி பூங்காவிற்குச் சென்று அங்கு காலை உணவை உண்டோம். பின்னர் சற்று நேரம் விளையாடினோம். அப்பொழுது "அங்கே பார் அழகிய கட்டடமொன்று தெரிகிறதே!" என்று அனீக்கா கூறினாள். அதைக்கேட்ட ஆசிரியர் "இது தான் இலங்கையில் தாமரை வடிவிலே அமைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிய கலையரங்கமாகும். இது பராக்கிரமபாகு மன்னனால் பொலன்னறுவைக் காலத்தில் கட்டப்பட்ட தாமரைத் தடாகத்தின் வடிவத்தை ஒத்தது. இது ஆயிரத்திற்கு மேற்பட்ட இருக்கைகளைக் கொண்டது." எனக் கூறினார்.

(i) மாணவர்கள் விடுமுறை நாளில் எங்கு செல்ல ஆயத்தமானார்கள்? ..........................................................

(ii) கல்விச்சுற்றுலாவிலே முதலில் சென்ற இடம் யாது? ..........................................................

(iii) அனீக்கா காட்டிய கட்டடம் யாது என ஆசிரியர் கூறுகிறார்? ..........................................................

(iv) பொலன்னறுவைக்கால தாமரைத் தடாகம் எம்மன்னனால் கட்டப்பட்டுள்ளது? ..........................................................

(v) மாணவர்களுக்கு அதிகாலையில் புத்துணர்ச்சியைத் தந்தவை எவை? ..........................................................

(vi) "கலையரங்கம்" எனும் சொல்லை பிரித்தெழுதுக. ..........................................................

**(02) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) இலாபம் :- .............................................. (ii) இணைதல் :- ..............................................

**(03) பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

நண்பா நீ ஏன் நேற்று பாடசாலைக்கு வரவில்லை என்று குமாரி கேட்டாள்

**(04) பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும். :- ..........................................................

**(05) கீழே தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.**

கண்ணன் புல்லாங்குழல் இசையைக் கேட்டான். :- ..........................................................

**(06) கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள்ளிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

( ஒளிர்ந்தது, வந்தேன், பென்சில்கள், நீ, ஆசிரியர்கள் )

(i) அஃறிணை, பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல் :- ..............................................

(ii) உயர்திணை, பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல் :- ..............................................

(iii) அஃறிணை, படர்க்கை ஒருமை வினைச்சொல் :- ..............................................

**(07) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( ✗ ) எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

(i) வண்ணத்துப்பூச்சி மலர்களில் தேனைக் குடித்தன. (   )

(ii) கடற்கரையில் சிறுவர்கள் கூடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். (   )

(iii) உழவன் வயலை ஆழமாக உழுதனர். (   )

(iv) நாங்கள் கைகளைக் கழுவி உணவு உண்பதற்குத் தயாரானோம். (   )

**(08) அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) .............................. ( எண்ணை / எண்ணெய் ) அடங்கிய உணவை மிகையாக உண்பதைத் தவிர்த்தல் நல்லது.

(ii) தம்பி பழைய புத்தகத்தைக் .............................. ( கிளிக்கின்றான் / கிழிக்கின்றான் )

(iii) மாணவன் புகைவண்டியில் .............................. ( பிரயானம் / பிரயாணம் ) செய்தான்.

kalvi.lk
CamScanner

(09) **முதலில் தரப்பட்டுள்ள உவமைத் தொடருக்குச் சமனான கருத்தை வெளிப்படுத்தும் உவமைத் தொடரினைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

நீர்மேல் எழுத்துப்போல :- ( சூரியனைக்கண்ட தாமரைபோல / ஒளியைக்கண்ட இருள்போல / கல்லில் நார் உரிப்பதுபோல )

(10) **கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.**

(i) has / legs / My / four / cat :- .................................................. (ii) this / pencil? / your / Is :- ..................................

(11) **முதலில் வினவப்பட்டிருக்கும் வினாவிற்கான விடையைப் பூர்த்தி செய்க.**

Where is Saman? :- ........................................................................................ Canteen.

(12) **பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) I can swim :- ...................................................... (ii) What are these? :- ..................................................

(13) **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) விதுஹல்பதி :- ..................................................... (ii) வேலாவ :- ..........................................................

(14) **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

உங்கள் வயது எத்தனை? :- ....................................................................................................................


(15) 

இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? ................................................


(16) மு.ப 9.45 மணிக்கு வரவேண்டிய பேருந்து ஒன்று 20 நிமிடங்கள் தாமதித்து வந்தடைந்தது. அதன்படி, அப்பேருந்து வந்தடைந்த நேரத்தை எழுதுக. ...............................

(17) 


இக்கடிகார முகத்தினால் காட்டப்பட்டுள்ள நேரம் 6 கழிந்து 50 நிமிடங்களாகும். இந்நேரத்தை வேறொரு முறையில் எழுதுக. ........................................................................

(18) 


இவ்விரு எண்சட்டங்களும் காட்டும் எண்களின் கூட்டுத்தொகையை இலக்கங்களில் எழுதுக. ...........................................................

(19) 

இவ்வுருவின் எல்லாப் பக்கங்களின் நீளங்களும் சமனானவை. இவ்வுருவிலுள்ள சமச்சீர்க் கோடுகளை வரைந்துக் காட்டுக.

(20) 

உருவிலுள்ள,

(i) செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ................................

(ii) செங்கோணத்திலும் சிறிய கோணங்களின் எண்ணிக்கை யாது? ..........................................

(21) [7] [56] [9] இவ்வுருவில் எண்கள் எழுதப்பட்டுள்ள 3 கார்ட்போர்ட் அட்டைகள் காட்டப்பட்டுள்ளன. இம்மூன்று கார்ட்போர்ட் அட்டைகளையும் அருகருகே வைப்பதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய மிகப் பெரிய எண் யாது? ...................................

(22)

| | |
|---|---|
| 223 | 175 |
| 350 | 367 |

கூட்டினுள் உள்ள எண்களுள் 5 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண்களை எழுதுக. ..........................................................................

(23) (i) கீழே தரப்பட்டுள்ள சிட்டையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| | பொருட்களின் வகைகள் | ஒன்றின் விலை (ரூபாய்) | கொள்வனவு செய்த அளவு | தொகை ரூபாய். சதம் |
|---|---|---|---|---|
| 1. | அடிமட்டம் | 12.00 | .............. | 36. 00 |
| 2. | புத்தகம் | 60.00 | 3 | ................ |
| 3. | அழிறப்பர் | ................ | 4 | 12. 00 |

(ii) அருகேயுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்த பின் வியாபாரிக்கு ரூபாய் 100.00 நாணயத் தாள்கள் 3 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? ...........................................................

(24) 


உருவிற்கேற்ப P, Q ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள திசைகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

...................................................................................................

(25) 12 முட்டைகள் வீதம் அடுக்கப்பட்ட 5 பெட்டிகளும், 6 முட்டைகள் வீதம் அடுக்கப்பட்ட 4 பெட்டிகளும் உள்ளன. அதன்படி, எல்லாப் பெட்டிகளிலும் உள்ள முட்டைகளின் மொத்த எண்ணிக்கை யாது? ............................

(26) [ ] + [ ] = XIII அருகேயுள்ள இரு வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான உரோம எண்குறிகளை எழுதுக.

(27) (i) 250g கிழங்கின் விலை ரூபாய் 80.00 ஆகும். அதன்படி, 750g கிழங்கின் விலை யாது? ..........................................


(ii) 2 லீற்றர் பாலின் விலை ரூபாய் 200.00 ஆகும். அதன்படி, $\frac{1}{2}$ லீற்றர் பாலின் விலை யாது? ......................................

kalvi.lk
CamScanner

சுட்டெண்:-......................................

(28) 21 400$ml$ கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 11 600$ml$ நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 1200$ml$ நீரை ஊற்றும்போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் அளவு யாது?..........................

(29) பெட்டியொன்றில் ஒவ்வொரு நிறத்திலும் உள்ள பந்துகளின் எண்ணிக்கை கீழே வரைபிலும், அட்டவணையிலும் காட்டப்பட்டுள்ளன.




| பந்துகளின் நிறங்கள் | பந்துகளின் எண்ணிக்கை |
|---|---|
| சிவப்பு | 8 |
| மஞ்சள் | 4 |
| நீலம் | 6 |
| பச்சை | ............ |

(i) வரைபிலுள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையிலிருக்கும் வெற்றிடத்தை நிரப்புக.

(ii) அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபின் வெற்று நிரலில் நிழற்றிக் காட்டுக.

✱ **இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) பச்சோந்தி தனது பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் செய்யக்கூடியது,
(1) தனது கால் நகத்தால் எதிரியைத் தாக்கும். (2) தனது உடலின் நிறத்தை மாற்றிக்கொள்ளும்.
(3) தனது வாலை உடைத்துவிட்டு ஓடும்.

(31) மின்காந்தம் ஒன்றில் கவரும் தன்மையை அதிகரிக்கக்கூடியது,
(1) பெரிய இரும்பாணி ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம்
(2) இரும்பாணியைச் சுற்றியுள்ள கம்பிச் சுருள்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம்
(3) உலர் மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம்

(32) A  B  C  D  அருகே ஒவ்வொரு முகமும் வெளிப்படுத்தும் முகபாவனையை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,
(1) அச்சம், சினம், கவலை, மகிழ்ச்சி (2) மகிழ்ச்சி, நடுநிலைத்தன்மை, அச்சம், அருவருப்பு
(3) கவலை, அச்சம், சினம், மகிழ்ச்சி

(33) தினமும் போதுமான அளவு நீரைப் பருகுவதால் ஏற்படும் நன்மை,
(1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல். (2) உடற் கொழுப்பு குறைவடைதல். (3) சிறுநீர் கழித்தலில் அசௌகரியம்.

(34) மின்சாரம் குறைவாக விரயமாவதற்குச் **செய்யக்கூடாதது,**
(1) அணியும் ஆடையை மட்டும் மின்அழுத்தியினால் அழுத்தல். (2) CFL மின்குமிழ்களைப் பயன்படுத்தல்.
(3) மின்சார உபகரணங்களை இயன்றளவு குறைவாகப் பயன்படுத்தல்.

(35) இரவு வேளைகளில் தூங்கும்போது நுளம்புகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு எடுக்கக்கூடிய மிகச் சிறந்த வழிமுறை,
(1) நுளம்புச் சுருள் பற்றவைத்தல். (2) துளசி தாவரத்தை எரித்து புகைப் பிடித்தல். (3) நுளம்பு வலையைப் பயன்படுத்தல்.

(36) குழு விளையாட்டுக்களாவன,
(1) பரிதிவட்டம் எறிதல், குண்டு போடுதல். (2) ஈட்டி எறிதல், உயரம் பாய்தல். (3) எல்லே, காற்பந்து

(37) சூழல் **மாசடையாத** முறையொன்று,
(1) வெற்றுக் கிருமிநாசினி போத்தல்களை அடித்துச் செல்லும் நீரில் இடல்.
(2) ஆற்று நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துதல்.
(3) தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை ஆற்று நீரில் சேர்த்தல்.

(38) ஆனந்த சமரகோன் அவர்கள்,
(1) இலங்கையின் முதலாவது ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை வென்ற வீரர்.
(2) இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர். (3) இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை எனக் கருதப்படுபவர்.

(39) கறையானால் சூழலுக்கு ஏற்படும் சேவை,
(1) பூக்களில் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும். (2) சூழலிலுள்ள குப்பைகளை உக்கலடைவதற்கு உதவும்.
(3) வித்துக்கள் பரம்பலுக்கு உதவும்.

(40) தாளத்தை சரியாக வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் சங்கீத உபகரணம்,
(1)  (2)  (3) 

(41) வெடித்தல் மூலம் பரவும் வித்துக்கள்,
(1) மரமுந்திரிகை, நாயுருவி (2) எருக்கலை, எண்ணெய் (3) இறப்பர், ஆமணக்கு

(42) இலங்கைக்கு உரித்தான தாவரங்கள்,
(1) இறப்பர், தேயிலை (2) ஹீன்போவிட்டியா, கெக்கட்டியா (3) ஈரப்பலா, கோப்பி


CamScanner

(43) பிராணிகள் உண்ணும் உணவு வகைகளுக்கேற்ப பிராணிகளை பிரிக்கக்கூடிய பிரதான பகுதிகளின் எண்ணிக்கை,
(1) 3 (2) 4 (3) 5

(44) 
இரு பிள்ளைகளும் செய்யும் இச்செயற்பாடு அழைக்கப்படும் பெயர்,
(1) முயல் போன்று பாய்ந்து பாய்ந்துச் செல்லல். (2) மயிர்க்கொட்டி போன்று செல்லல்.
(3) நண்டு போன்று நடந்துச் செல்லல்.

(45) வீதியிலுள்ள ஒளிச் சமிக்ஞைத் தூணில் மஞ்சள் நிற விளக்கு ஒளிர்வதனால் குறிப்பிடப்படுவது,
(1) வாகனத்தை இடது பக்கமாகவோ வலது பக்கமாகவோ திருப்புக என்பதாகும்.
(2) வாகனத்தைச் செலுத்தத் தயாராகுக என்பதாகும். (3) வாகனத்தைச் செலுத்துக என்பதாகும்.

(46) சோறு, பாண், கிழங்கு வகைகளில் அதிக அளவில் அடங்கும் போசணைப் பொருள்,
(1) காபோவைதரேற்று (2) புரதம் (3) விற்றமின்கள்

(47) ஒரு குறித்த காலத்தில் அன்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவர வகைகள்,
(1) முள்முருக்கு, மரமுந்திரிகை (2) இறப்பர், கொன்றை (3) நித்தியகல்யாணி, கித்துள்

(48) பாதுகாப்பான சந்தர்ப்பம்,
(1) வெள்ளம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் வெள்ள நீரில் நீராடச் செல்லல்.
(2) மோட்டார் சைக்கிளில் செல்லும்போது தலைக்கவசம் அணிந்துச் செல்லல்.
(3) வாகன நெரிசல் உள்ள வேளைகளில் பாதையைக் கடத்தல்.

(49) உள்ளூர் தபால்களையும், உள்நாட்டுத் தபால்களையும், வெளிநாட்டுத் தபால்களையும் இடுவதற்கான தபால்பெட்டிகளின் நிறங்கள் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடை,
(1) பச்சை, சிவப்பு, நீலம் (2) சிவப்பு, பச்சை, நீலம் (3) நீலம், சிவப்பு, பச்சை

(50) கீழே தரப்பட்டுள்ள மாகாணங்களில் அதிக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்,
(1) மத்திய மாகாணம் (2) கிழக்கு மாகாணம் (3) வட மாகாணம்

(51) தேசப்படங்களில் புகையிரத வீதிகளைக் குறிக்கப் பயன்படுத்தும் நிறம்,
(1) சிவப்பு (2) கறுப்பு (3) பச்சை

(52) பனிக்கட்டிகளை நீண்ட காலம் பேணச் செய்ய வேண்டிய முறை **அல்லாதது,**
(1) பனிக்கட்டிகளின் மீது உப்புத்தூளைப் பரவி மூடி வைத்தல்.
(2) பனிக்கட்டிகளின் மீது மரத்தூளைப் பரவி மூடி வைத்தல். (3) பனிக்கட்டிகளின் மீது உமியைப் பரவி மூடி வைத்தல்.

(53) உயர் குருதியமுக்க நோய் ஏற்படுவதற்கான பிரதான காரணம்,
(1) விற்றமின் அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணல்.
(2) மிளகாய் அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணல்.
(3) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணல்.

(54) முயல் விரும்பி உண்ணும் தாவரம்,
(1) குப்பைமேனி (2) சிறுபுள்ளடி (3) வல்லாரை

(55) பயிர்ச்செய்கைக்குத் தீங்குகளை ஏற்படுத்தும் சிறு பிராணிகளை இல்லாதொழிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய முறை,
(1) முசிறுக் கூடுகளைப் போடுதல். (2) கிருமிநாசினிகளைத் தெளித்தல். (3) நுளம்புச் சுருளை எரித்தல்.

(56) ஒருவர் மயக்கமடைந்ததும் உடனடியாகச் செய்ய வேண்டியது,
(1) செயற்கைச் சுவாசம் கொடுத்தல். (2) விரைவாக நீரைப் பருகக் கொடுத்தல். (3) நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்.

(57) உணவு சமைக்கும்போது அவற்றின் போசணைத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்குச் செய்ய வேண்டியது,
(1) உருளைக்கிழங்குகளை அவிக்கும்போது தோல்களை அகற்றி அவித்தல்.
(2) கீரை வகைகளை வெட்டுவதற்கு முன்னர் கழுவுதல்.
(3) பயறு, கௌப்பி போன்றவற்றை அவித்த பின்னர் நீரை வடித்து அகற்றுதல்.

(58) அயடீன் அடங்கியுள்ள உணவு வகைகள்,
(1) கடல் மீன், கருவாடு (2) தோடை வகை, நெல்லிக்காய் (3) கீரை வகைகள், தானிய வகைகள்

(59) விசர்நாய்க்கடி நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மிகச் சிறந்த வழிமுறை,
(1) விசர்நாய்க்கடி நோயுள்ள நோயாளிகளை குணப்படுத்த தேவையான மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு வழங்குதல்.
(2) நீர் தேங்கும் வெற்றுப் பேணிகள், பழைய டயர்கள் போன்றவற்றை அழித்தல்.
(3) நாய்களுக்கு விசர்நாய்க்கடி தடுப்பூசிகளை வழங்குதல்.

**(60) "எமது வீட்டிற்கு உறவினர்கள் வருகைத் தந்த நாள்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................


(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

Education கல்வி அதியாபன



CS CamScanner




# தரம் 5

# புலமை வித்தகன்

**தரம் 5 மாணவர்களிற்கான யாழ்ப்பாணம் R.PRASANTHAN (PRI.TRD) ஆசிரியர் எழுதிய புலமைவித்தகன் மாதிரி வினாத்தாள்கள்.**

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1050/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

**075 287 1457**

**BUY BOOKS**

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page